


We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## NOVEMBER

*We Are Here..!! To Guide You..!!*



# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## நவம்பர் - 22.11.2018


We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்
- முக்கிய தினங்கள்












## இந்திய நிகழ்வுகள்

- **இந்தியாவின் யானைகளுக்கான முதல் பல்நோக்கு மருத்துவமனை** உத்திரப் பிரதேசத்தில் **மதுராவில்** உள்ள **சுர்முரா** கிராமத்தில் தொடங்கப்பட்டுள்ளது. இது **வைல்ட்லைப் Sos (wildlife Sos)** என்ற நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் ஏற்கெனவே 2010ம் ஆண்டில் முதல் யானை பாதுகாப்பு மற்றும் நலமையத்தை ஏற்படுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

- **மத்திய மற்றும் மாநில புள்ளியியல் அமைப்புகளின் 26வது மாநாடு,** இமாச்சலப் பிரதேசத்தின் **தர்மசாலாவில்** நடைபெற்றது. இந்த மாநாடானது மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
    - இவ்வருட மாநாட்டின் கருத்துருவானது **"அலுவல் பூர்வமான புள்ளியியல் தரவுகளின் தர நிர்ணயம்"** என்பதாகும்.

- **கோவா** கப்பல் கட்டும் தளத்தில் **2 போர்க் கப்பல்களை** கட்டுவதற்கான ஒப்பந்தம், **இந்தியா – ரஷ்யா** நாடுகளுக்கிடையே கையெழுத்தாகி உள்ளது.
    - இந்த ஒப்பந்தம், இந்திய ராணுவ பொதுத்துறை நிறுவனமான **கோவா சிப்யார்ட் லிமிடெட்**, ரஷ்ய அரசின் **இராணுவ மேஜர் ரோசோ போர்ன் எக்ஸ்போர்ட்** நிறுவனத்திற்கும் இடையே கையெழுத்தாகியுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- எரித்ரியா மீது சுமத்தப்பட்ட பல்வேறு தடைகளை விலக்கிக் கொள்வதற்கு ஒன்பது வருடங்களுக்குப் பிறகு **2018-ல், ஐ.நா. பாதுகாப்பு குழுவானது (UNSC – United Nations Security Council)** ஒப்புதல் அளித்துள்ளது.
    - பாதுகாப்பு குழுவானது (UNSC), எரித்ரியா மீது **ஆயுதத்தடை, பயணத்தடை, சொத்து முடக்கம்** ஆகியவற்றை விதித்திருந்தது.
- குறிப்பு:
    - எரித்ரியாவானது மேற்கில் சூடான் தெற்கில் எத்தியோப்பியா மற்றும் தென்கிழக்கில் டிஜிபுட்டி ஆகியவற்றை

எல்லைகளாகக் கொண்ட ஆப்பிரிக்க நாடாகும்.

- உள்நாட்டு மக்களுக்கான தொழில்சார் பயிற்சிகள், கல்விமுறை மற்றும் மொழிதிறன் வளர்ப்பு போன்றவற்றில் அவர்களின் திறமைகளை வளர்க்க ஒரு நாடு எந்த அளவில் முதலீடு செய்திருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு, சுவிட்சர்லாந்தின் **ஐ.எம்.டி பிசினஸ் ஸ்கூல் நடத்திய "உலக திறமையான நாடுகள் - 2018"** உலகளாவிய ஆய்வில் **இந்தியாவானது** மொத்தம் **63 நாடுகளில் 53வது இடத்தைப்** பிடித்துள்ளது.
    - இந்த ஆய்வில் சுவிட்சர்லாந்து முதலிடத்தில் உள்ளது. **2017ம் ஆண்டில் இந்தியா 51வது** இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## விருதுகள்

- அமைதி மற்றும் வளர்ச்சிக்கான "இந்திரா காந்தி விருது" **(2018 Indira Gandhi Prize)** டெல்லியைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பான "**CSE**"–க்கு (அறிவியல் - சுற்றுச்சூழல் மையம்) வழங்கப்பட்டுள்ளது.
    - சுற்றுச்சூழல் சீரழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் நிலையான பங்களிப்பை, செய்துவருவதற்காகவும், இந்தியாவில் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்களில் அந்த அமைப்பு வழங்கியுள்ள பங்களிப்பிற்காக சிஎஸ்இ **(CSE – Center For Science and Environment)** அமைப்புக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

## நியமனங்கள்

- 2016ஆம் ஆண்டு நடைபெற்ற வாக்கெடுப்பின் போது ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகுவதற்கு ஆதரவளித்த இளையோர் சுகாதாரத்துறை அமைச்சர் **ஸ்டீபன் பார்க்லே,** பிரெக்ஸிட் **(BREXIT)** அமைப்பின் **புதிய செயலாளராக** பிரிட்டன் பிரதமர் **தெரசா மேவால்** நியமிக்கப்பட்டு உள்ளார்.
    - ஐரோப்பிய ஒன்றியத்தை விட்டு விலகுவதற்கான தெரசா



We Shine Academy™

மேவின் வரைவு அறிக்கை தொடர்பாக பதவி விலகிய **டொமினிக் ராப்** என்பவருக்குப் பதிலாக ஸ்டீபன் பார்க்லே பதவியேற்றுள்ளார்.

## முக்கிய தினங்கள்

- குவாமி ஏக்தா வாரம் **(தேசிய ஒருமைப்பாட்டு வாரம்) – நவம்பர் 19 முதல் 25 வரை**
  - தேசிய ஒருமைப்பாட்டையும், மத நல்லிணக்க உணர்வையும் பலப்படுத்தி ஊக்குவிக்க ஆண்டுதோறும் **நவம்பர் 19 முதல் நவம்பர் 25 வரை** தேசிய ஒருமைப்பாட்டு வாரம் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
  - குவாமி ஏக்தா வாரத்துடன் ஒன்றிணைந்துப் போகும் வகையில் மத நல்லிணக்கப் பிரச்சாரத்தை மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தன்னாட்சி அமைப்பான மத நல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பு நடத்துகிறது.
- குறிப்பு:
  - தேசிய ஒருமைப்பாட்டு தினம் - **நவம்பர் 19**
  - தேசிய மத நல்லிணக்க கொடிநாள் - **நவம்பர் 25**

We Shine Academy TM